மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், கும்பகோணம்

(கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்)

முன்னிலை - **திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,**

தீர்ப்பாய நீதிபதி (கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி)

கும்பகோணம்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதி திங்கட்கிழமை

**எம்.சி.ஓ.பி எண். 270/2022**

**CNR No.TNTJ190003812025**

கனகவள்ளி, க/பெ. சேப்பையன், வயது 65, க.எண். 435,

மெயின்ரோடு, அண்ணாநகர், புதுசத்திரம், கிருஷ்ணாபுரம்,

கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம். .....மனுதாரர்

-எதிர்-

1) செல்வராணி, க/பெ. ரவிச்சந்திரன், வயது 40,

சத்தியாபிள்ளைத்தெரு, டி.ஆர்.பட்டினம், காரைக்கால் மாவட்டம்.

2) கிளை மேலாளர், Bharathi AXA General Insurance Co. Ltd.,

Above Punjab National Bank, Macdonald's Road,

Cantonment Trichy. .....எதிர்மனுதாரர்கள்

இம்மனு இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.Kராஜா அவர்கள் ஆஜராகியும், 1ஆம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியும் நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C. நெடுஞ்செழியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

மனுதாரருக்கு 13.04.2022 ஆம் தேதி விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக ரூ.20,00,000/- வட்டியுடன் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 140 மற்றும் 166 உ/இ 3(1)-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவின் சுருக்கம்</u>**:

மனுதாரருக்கு விபத்தின் போது வயது 65 ஆகும். மனுதாரர் விபத்தின் போது விவசாயகூலி வேலை செய்து மாதம் ரூ.15,000/- வருமானம் ஈட்டி வந்தார். கடந்த 13.04.2022 மனுதாரர் தனது மகனுடன் செட்டி மண்டபம் சென்று விட்டு வீட்டிற்கு வருவதற்காக கும்பகோணம் - திருவாரூர் மெயின்ரோட்டில் கிருஷ்ணாபுரம் பேருந்து நிறுத்தத்திற்கு முன்பு மதியம் சுமார் 1.30 மணியளவில் ரோட்டின் இடதுபுறம் நடந்து சென்று கொண்டிருந்த போது அதே சாலையில் மனுதாரருக்கு பின்னால் வந்த PY-02-T-5595 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும், கவனக் குறைவாகவும், ஓட்டி வந்து மனுதாரரின் மீது பயங்கரமாக மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார். மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டு மனுதாரரை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 13.04.2022 அன்று அனுமதிக்கப்பட்டு பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 17.04.2022 அன்று எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டு 21.04.2022 அன்று மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். மனுதாரர் சிகிச்சை செலவாக ரூ.3,00,000/- வரை செலவு செய்துள்ளார்.

மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட PY-02-T-5595 என்ற பதிவு எண் கொண்ட இருச்சக்கர வாகன ஓட்டுனர் மீது நாச்சியார்கோவில் காவல்நிலைய குற்ற எண்.232/2022-ல் இதச பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு காரணம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் கவனக்குறைவே ஆகும். மேலும் 1 ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும், 2 ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை காப்புறுதி பெற்றவர் என்பதாலும் எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ ரூ.20,00,000/- வட்டியுடன் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார்கள்.

3) <u>2 ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களை அவர் நிரூபிக்க கடமைப்பட்டள்ளார். 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீட்டு பாலிசி இருந்தது என்பது குறித்தும் அதன் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்து என்பது குறித்தும் 1ஆம் எதிர்மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். PY-02-T-5595 என்ற பதிவு எண் கொண்ட இருச்சக்கர வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதும், ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்பது குறித்தும் நிரூபிக்கப்பட வேண்டிய அம்சமாகும். மனுதாரர் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தவறான திசையில் வந்து சாலையை கடந்ததால் மேற்கண்ட விபத்தானது ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு மனுதாரரின் கவனக்குறைவே காரணம் ஆகும். சில நாட்கள் மட்டுமே மனுதாரர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாலும், மனுதாரருக்கு நிரந்தர இயலாமை ஏதும் இல்லை என்பதாலும், மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை ஏதும் கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் தொழில் மற்றும் வருமானம்

ஆகியவற்றை நிரூபிக்கும் வண்ணம் சாட்சி, சான்றாவணங்களை முன்னிடவில்லை. மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகம். இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**4) <u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் - ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற சான்றாவணம் நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கும்பகோணம் வட்டார போக்குவரத்து அலுவலக இளநிலை உதவியாளர் திரு. விக்னேஷ் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தின் சட்ட அலுவலர் பிரவீன் மனோகர் என்பவர் எ.ம.சா.ஆ.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 170-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>**:

| | |
|---|---|
| 1) | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது? |
| 2) | மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார்? |
| 3) | மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு? |

**6) <u>பிரச்சனை எண்.1 ற்கான தீர்வு</u>**:

(i) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. கடந்த 13.04.2022 மனுதாரர் தனது மகனுடன் செட்டி மண்டபம் சென்று விட்டு வீட்டிற்கு வருவதற்காக கும்பகோணம் - திருவாரூர் மெயின்ரோட்டில்

கிருஷ்ணாபுரம் பேருந்து நிறுத்தத்திற்கு முன்பு மதியம் சுமார் 1.30 மணியளவில் ரோட்டின் இடதுபுறம் நடந்து சென்று கொண்டிருந்த போது அதே சாலையில் மனுதாரருக்கு பின்னால் வந்த PY-02-T-5595 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும், கவனக் குறைவாகவும், ஓட்டி வந்து மனுதாரரின் மீது பயங்கரமாக மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டு மனுதாரரை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 13.04.2022 அன்று அனுமதிக்கப்பட்டு பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 17.04.2022 அன்று எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டு 21.04.2022 அன்று மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் சிகிச்சை செலவாக ரூ.3,00,000/- வரை செலவு செய்துள்ளார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ஆம் எதிர்மனுதாரர் இருச்சக்கர வாகனத்திற்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை மற்றும் காப்பீட்டு பாலிசி இல்லை என்றும், 2ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சிகிச்சை தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மேற்கண்ட விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் காரணம் இல்லை என எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீட்டு பாலிசி உள்ளது என்றும், ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது

என்றும் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மேற்கண்ட விபத்தானது மனுதாரர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் தவறான திசையில் வந்ததால் தான் ஏற்பட்டது என கற்றறிந்த 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மனுதாரரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சாலையின் குறுக்கே வந்ததாலும் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் கற்றறிந்த 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

(iii) 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனரால் தான் விபத்து ஏற்பட்டது என மனுதாரர் புகாரிலும், மனுவிலும் குறிப்பிட்டுள்ளார். ம.சா.ஆ.1/முதல் தகவல் அறிக்கை மற்றும் ம.சா.ஆ.8 குற்ற இறுதி அறிக்கையில் 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரின் அஜாக்கிரதையாகவும் கவனக் குறைவாகவும், இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து மோதியதாக ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட விபத்தில் பாதிக்கப்பட்ட ம.சா.1ன் சாட்சியத்தை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் நேரடி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் நேரடி சாட்சிகள் முன்னிடப்படவில்லை. ம.சா.1ன் சாட்சியம், முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் தான் காரணம் என பிரச்சனை 1ற்கு இத்தீர்ப்பாயத்தால் தீர்வு காணப்படுகிறது.

7) **<u>பிரச்சனை எண். 2-ற்கான தீர்வு</u>**:

(i) மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார் என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக் குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டது. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.4 மற்றும் பாலிசி சான்று ம.சா.ஆ.6 ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்து 13.04.2022 ல் நிகழ்ந்துள்ளது. காப்பீடு பாலிசி 11.08.2024 வரை நிலுவையில் இருந்துள்ளது. விபத்து சமயத்தில் பாலிசி நிலுவையில் உள்ளது நிரூபிக்கப்பட்டது.

(ii) 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்று கற்றறிந்த 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருப்பது குறித்து ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு இருசக்கர வாகனம் மற்றும் இலகுரக வாகனம் ஓட்டுவதற்கு விபத்து தேதியில் ஓட்டுநர் உரிமம் காலாவதியாகிவிட்டது என்று எ.ம.சா.1 வட்டார போக்குவரத்து அலுவலக இளநிலை உதவியாளர் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். கனரக வாகன ஓட்டுநர் உரிமம் மட்டுமே விபத்து தேதியில் நிலுவையில் இருந்துள்ளது என்றும் எ.ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கான ஓட்டுநர் உரிமம் 09.02.2021 வரை உள்ளது என்று ம.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து நடந்த தேதியான 13.04.2022 அன்று 1ம் எதிர்மனுதாரரின்

வாகன ஓட்டுநருக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என தெரியவருகிறது.

(iii) Branch Manager, M/s.SBI General Insurance Company Ltd., Vs. Muthulakshmi and others என்ற CMA No. 554, 309, 569, 671, 755 of 2025 என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள முன்தீர்ப்பு நெறி பின்வருமாறு In view of the discussions made earlier, this Court holds that notwithstanding deletion of proviso to Sub-Section (4) of Old Section 149 and Sub-Section (5) of very same Section which is renumbered as Section 150, the insurer's liability to honour the award passed against the insured in respect of third party claims continues and in the event of insurer's success in raising a defence under Sub-Section (2) of New Section 150, the Tribunal can very well order pay and recovery.

(iv) விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாத பட்சத்தில் காப்பீடு பாலிசி நிலுவையில் இருக்கும் பட்சத்தில் காப்பீடு நிறுவனம் இழப்பீட்டு தொகையை மனுதாரருக்கு வழங்கி விட்டு பின் வாகனத்தின் உரிமையாளரிடம் இருந்து வசூலித்து கொள்ள வேண்டும் என்று பிறப்பித்த முன் தீர்ப்பு நெறி இவ்வழக்கிற்கு முற்றிலும் பொருந்தும்.

(v) ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரருக்கு வழக்கில் அறிவிப்பு அனுப்பியும் நீதிமன்றத்தில் தனது தரப்பு வழக்கை முன் வைப்பதற்கு ஆஜர் ஆகவில்லை. எனவே, 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்ததா இல்லையா என்பதை நிரூபிக்கும் பொறுப்பு 1ம் எதிர்மனுதாரரை சார்ந்ததாகும்.

(vi) மேற்கண்ட முன் தீர்ப்பின் படி மேற்கண்ட வாகனமானது விபத்து நடந்த தேதியன்று காப்பீடு செய்யப்பட்டிருந்து காப்பீட்டு பாலிசி விதி மீறல் ஏற்பட்டுள்ளதால் மனுதாரருக்கு முதலில் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை வழங்கிவிட்டு பின் வாகன உரிமையாளரிடமிருந்து வசூல் செய்துக்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டுள்ளது இவ்வழக்கிற்கும் பொருந்தும். எனவே மேற்கண்ட முன் தீர்ப்பு நெறிபடி இழப்பீட்டு தொகையை மனுதாரருக்கு, 2ஆம் எதிர்மனுதாரர் வழங்கிவிட்டு, 1ஆம் எதிர்மனுதாரரிடமிருந்து நிறைவேற்று மனு செய்து வசூல் செய்துக்கொள்ள வேண்டியது என இத்தீர்ப்பாயம் பிரச்சனை எண்.2-ற்கு தீர்வு காணப்படுகிறது.

8) **பிரச்சனை எண்.3-ற்கான தீர்வு:**

விபத்து சமயத்தில் மனுதாரர் விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்துள்ளார் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரருக்கு தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டு மனுதாரரை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 13.04.2022 அன்று அனுமதிக்கப்பட்டு பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 17.04.2022 அன்று எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டு 21.04.2022 அன்று மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என்றும், மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயம் கொடுங்காயம் என்றும் ம.சா.ஆ. 2, 3 தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு சான்று மற்றும் காயச்சான்று மூலம் அறிய முடிகிறது.

9) **<u>கொடுங்காயத்திற்கான இழப்பீடு</u>**

மருத்துவ குழுமம் மனுதாரரை பரிசோதித்து வழங்கிய இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1ல் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊன விழுக்காடு 50% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக இயலாமையாக 50 சதவீதம் நிர்ணயிக்கப்படுகிறது. மனுதாரருக்கு வயது 65 என்பதால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற M. Revanth kumar Vs. Sun-X-Concrete India Pvt.Ltd., 2025(2) TNMAC 181 dated 10.01.2025 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முன் தீர்ப்பு நெறியை பின்பற்றி 1 சதவீத ஊனத்திற்கு ரூ.10,000/- நிர்ணயித்தால் சரியானதாக இருக்கும் என தீர்மானிக்கப்படுகிறது. மேற்கண்ட தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்தும் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே நிரந்தர இயலாமைக்கான இழப்பீடு 50 X 10,000 = ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

10) **<u>வலி மற்றும் துன்பம்</u>**

விபத்தினால் மனுதாரருக்கு தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ சான்று ஆவணங்களிலும், மருத்துவ குழுமம் வழங்கிய சான்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே வலி மற்றும் துன்பத்திற்கு ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

11) **உதவியாளர் செலவு**

விபத்தினால் மனுதாரருக்கு தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டு அதற்காக 8 நாட்கள் உள்நோயாளியாக கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் அவருக்கு உதவியாளர் தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே உதவியாளர் செலவுத் தொகையாக ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

12) **ஊட்டச்சத்து உணவு**

மனுதாரருக்கு விபத்தினால் தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதால் அவருக்கு ஊட்டச்சத்து உணவு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

13) **போக்குவரத்து செலவு**

மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு முதலில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். மேலும் மனுதாரருக்கு விபத்தினால் தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதால் பல முறை

மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க வேண்டியிருந்திருக்கும். அதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வழங்கப்படுகிறது.

14) **வசதி இழப்பு**

மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு முதலில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். மேலும் மனுதாரருக்கு விபத்தினால் தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதால் அவருக்கு செயல்திறன் இயலாமை 50 சதவீதம் என்று மருத்துவக்குழுமம் சான்று வழங்கியுள்ளது. செயல்திறன் இயலாமை என்பதால் வசதி குறைவு ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை. எனவே, வசதி குறைவிற்காக ரூ.50,000/- இழப்பீடாக நிர்ணயிக்கப்படுகிறது.

15) **வருமான இழப்பு**

விபத்தினால் ஏற்பட்ட இயலாமைகளாலும், தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் மற்றும் எலும்பு முறிவினாலும் குறைந்தபட்சம் நான்கு மாதங்கள் மனுதாரர் ஓய்வில் இருந்திருக்க வேண்டியிருக்கும். எனவே மேற்கண்ட விபத்தானது 13.04.2022 அன்று நிகழ்ந்துள்ளதால் மாத உத்தேச வருமானமாக ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம்) நிர்ணயிக்கப்பட்டு, நான்கு மாத வருமான இழப்பிற்காக 4 X 15,000 = 60,000/- (ரூபாய் அறுபதாயிரம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

**17) மருத்துவ செலவு**

மனுதாரர் விபத்தினால் தலையில் அடிப்பட்டு மண்டை ஓடு உடைந்து, வலதுகால், இடதுகையில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு, இடதுபக்க விலாவில் அடிபட்டு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. அதற்கான தொகைக்கான ரசீதுகள் ம.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்யதுள்ளார். அதில் மனுதாரரின் பெயர் குறிப்பிடாத பில்களை பொறுத்து மனுதாரர் இழப்பீடு பெற உரிமையற்றவர் ஆவார். கணினி ரசீதில் கையால் எழுதப்பட்ட தொகை குறித்து உரிய மருத்துவரின் சீட்டு இல்லாததால் கையால் எழுதப்பட்ட தொகை மட்டும் நிராகரிக்கப்படுகிறது. எஞ்சிய ரசீதுகளை பொறுத்து மருத்துவ செலவிற்காக ரூ.32386/- (ரூபாய் முப்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று எண்பத்து ஆறு) வழங்கப்படுகிறது.

**16) உடைகள் இழப்பிற்கான செலவு**

விபத்தின் போது ஏற்பட்ட உடைகளுக்கான சேத இழப்பீடு ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **இழப்பீடு தலைப்புகளில்** | **தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| 1. | கொடுங்காயத்திற்கான இழப்பீடு | 5,00,000/- |
| 2 | வலி மற்றும் துன்பத்திற்காக | 40,000/- |
| 3 | உதவியாளர் செலவிற்காக | 15,000/- |
| 4 | ஊட்டச்சத்து உணவிற்காக | 15,000/- |
| 5 | வசதி இழப்பிற்காக | 50,000/- |
| 6 | போக்குவரத்து செலவிற்காக | 10,000/- |
| 7 | வருமான இழப்பிற்காக | 60,000/- |
| 8 | மருத்துவ செலவிற்காக | 32,386/- |
| 9 | உடைகள் இழப்பிற்காக | 3,000/- |
| | **கூடுதல்** | 7,25,386/- |

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மொத்த இழப்பீடாக ரூ.7,25,386/- (ரூபாய் ஏழு லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து முந்நூற்று எண்பத்து ஆறு மட்டும்) கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.3-ற்கு தீர்வு காண்கிறது.

1) இறுதியாக, இம்மனு பகுதியாக அதற்குரிய விகிதாச்சார செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) 2 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு முதலில் மொத்த இழப்பீடாக ரூ.7,25,386/- (ரூபாய் ஏழு லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து முந்நூற்று எண்பத்து ஆறு மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையை வழங்கிவிட்டு பின் 1 ஆம் எதிர்மனுதாரர் / உரிமையாளரிடமிருந்து வசூல் செய்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

3) இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 2 ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில் அதாவது Additional Chief Judicial Magistrate Court, Kumbakonam in MACTOP Account No.17970100009585, I.O.B. Court Branch, Kumbakonam directly by NEFT or RTGS மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அவரது வங்கி கணக்கினை 10 நாட்கள் அவகாசத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணம் ரூ. 6525 /- ஐ 15 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.O.C. No.390-A/2014/F1 dated 13.02.2014-ல் பிறப்பித்துள்ள உத்தரவுபடி தனியாக தீர்ப்பாணை வனையப்படவில்லை.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | 17.08.2022 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 23.08.2022 |
| கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.20,00,000/- |
| வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ. 7,25,386 /- |
| மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.100/- |
| இழப்பீட்டிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.6625/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.6525 /- |

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>**:

| தலைப்பு | மனுதாரர் | எதிர்மனுதாரர் |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 6625 /- | - |
| வக்காலத்து | ரூ.10/- | ரூ.10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ.24753/- | ரூ.24753 /- |
| கூடுதல் | ரூ.31388/- | ரூ.24763 /- |

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.23 14:35:04 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.

| | |
|---|---|
| **<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**: | |
| ம.சா.1 | கனகவள்ளி |
| **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**: | |
| ம.த.சா.ஆ.1 | 17.04.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.2 | 21.04.2022 தேதியிட்ட தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் |

| | |
|---|---|
| | வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி நோட்டு அசல் |
| ம.த.சா.ஆ.3 | 21.04.2022 தேதியிட்ட தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.4 | 23.05.2022 தேதியிட்ட PY-02-T-5595 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.5 | 13.08.2019 தேதியிட்ட PY-02-T-5595 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தின் பதிவு சான்று பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.6 | 12.08.2019 தேதியிட்ட PY-02-T-5595 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தின் வாகன பாலிசி சான்று பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.7 | 09.02.2001 தேதியிட்ட PY-02-T-5595 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.8 | 30.11.2022 தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.9 | மருந்து ரசீதுகள் அசல் |
| ம.த.சா.ஆ.10 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.த.சா.ஆ.11 | மனுதாரரின் வங்கி புத்தக முதல் பக்க நகல் |
| நீ.ம.சா.ஆ.1 | மருத்துவக்குழு வழங்கி இயலாமை சான்று |
| **2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** | |
| எ.ம.சா.1 | விக்னேஷ் (இளநிலை உதவியாளர், கும்பகோணம் வட்டார போக்குவரத்து அலுவலகம்) |
| எ.ம.சா.2 | பிரவீன் மனோகர் (சட்ட அலுவலர், 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனம்) |
| **2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்** | |
| சா.சா.ஆ.1 | வட்டார போக்குவரத்து அலுவலர் சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கிய அனுமதிக் கடிதம் |
| சா.சா.ஆ.2 | பாலமுருகன் என்பவரின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகல் |

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.23 14:34:56 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.